**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**OS.No.666/2019**

**DW–2**

**நாள்– 02.06.2026**

**திரு. வைரபெருமாள் த/பெ. ராஜலிங்கம் (வயது 72/2026)**

**வாதிதரப்பில் குறுக்கு விசாரணை–**

**நான் விவசாய வேலை பார்க்கிறேன் . யார் கூலிக்கு வேலைக்கு அழைக்கிறார்களோ அவர்களிடம் வேலைக்கு போவேன் . நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை ராஜமாணிக்கம் அழைத்துவந்தார் . வாதி ராதாகிருஷ்ணன் பிரதிவாதி மீது கடை வாதி கடை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு பிரதிவாதியை 45 வருடங்களாக தெரியும். பிரதிவாதி சுமார் 45 வருடங்களாக கடை வைத்திருக்கிறார். கடையின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது . கடையின் நீளம் அகலம் 15 க்கு 10. பிரதிவாதி 45 வருடங்களுக்கு முன்பு அங்கு செல்போன் கடை வைத்திருந்தார். ராஜமணிக்கத்தின் கடைக்கு மேற்கே வாதி நாரயணன் வாடைகைக்கு விட்டிருந்தார். அந்த கடையின் அளவு 15 க்கு 10. எனது முதல் விசாரணைவாக்குமூலம் யார் விவரம் சொன்னத என்றால் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்தார்கள் வாக்குமூலம் கொடுத்தேன் . எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் விவரம் தெரியுமா என்றால் தெரியாது . வழக்கு சொத்து ராதகிருஷ்ணன் அம்மாவிற்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது . எந்த சர்வே நெம்பரில் வழக்கு சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தற்போது பேனா, பேப்பர், விற்பனை செய்து வருகிறார் . வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது பிரதிவாதி கையெழுத்துதான். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**Sd/–xxxxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.